**கொழும்புப் பல்கலைக்கழம், இலங்கை**

**சட்ட பீடம்**

**சட்ட மாணிப் பரீட்சை (நிகழ்நிலை), ஆண்டு III – 2020/2021**

# பகிரங்க சர்வதேசச் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 06

எவையேனும் **<u>மூன்று</u> <u>(03)</u>** வினாக்களுக்கு **<u>மாத்திரம்</u>** விடை தருக.
(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. சர்வதேசச் சட்டத்தின் இயல்புக்கு நிச்சயமற்றதன்மையும் உறுதிப்பாடின்மையும் மையமாகவுள்ளது என்பதையும், தற்போதுள்ள சர்வதேசச் சட்ட முறைமையினது கட்டுப்பாடுகள் மற்றும் கட்டமைப்புக்களுக்குள் மட்டுமே எந்தவொரு வளர்ச்சியும் ஏற்பட முடியும் என்பதனை 21ஆம் நூற்றாண்டின் வழக்கறிஞர் அறிந்திருத்தல் வேண்டும். மேலும், செயலெல்லைகள் ஒன்றையொன்று தழுவிச்செல்லுதல் காணப்படினும், உள்நாட்டின் சமூக நலன் மற்றும் நீதிச் செயன்முறைகள் என்பவற்றுக்கு குறைநிரப்பியாகவமையுமே தவிர சர்வதேசச் செயன்முறைகளானவை பதிலீடுசெய்யப்படுவதில்லை என்பதனையும் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

   உமது வாதங்களை ஆதாரப்படுத்துவதற்கான பொருத்தமான கோட்பாட்டு மற்றும் நடைமுறை எடுத்துக்காட்டுக்களினால் மேலுள்ள கூற்றினை நுணுக்கமாக ஆராய்க.

   **(100 புள்ளிகள்)**

2. 'ரெட்வூட்' என்ற நாட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ள பாரியதொரு நாடுகடந்த சுரங்க அகழ்வு மற்றும் மரம்வெட்டும் நிறுவனமொன்றான 'ரெட்லீப்' என்பது, சேலா என்ற நாட்டினது ஹரிதா என்ற பாதுகாக்கப்பட்ட வனத்தில் ''ஏதேனும் பொருளாதார செயற்பாடுகளை'' மேற்கொள்வதற்காக சேலா நாட்டின் அரசாங்கத்திடமிருந்து உரிமமொன்றை அண்மையில் பெற்றுக்கொண்டுள்ளது. ரெட்லீப் நிறுவனமானது ஏற்கனவே பல நூறு ஏக்கர் நிலத்தை அழிக்கத்தொடங்கியுள்ளது. கடந்த ஒரு மாதத்திற்குள் இந்த நிலைமை குறித்து செய்தி வெளியிட்ட இரண்டு ஊடகவியலாளர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்களாயினும், அவர்கள் இருவரும் தற்கொலை செய்துள்ளார்கள் என்று உள்ளூர் காவல்துறை அறிவித்துள்ளது. ''லாஸ்ட் சான்ஸ்'' என்பது சேலா நாட்டைத் தளமாகக் கொண்ட அரசுசாரா அமைப்பொன்றாகும். சாமியன் என்ற தேசிய இனக்குழுவானது சேலாவில் வாழுகின்ற பழங்குடியின மக்களின் குழுவாகும். இந்த நிலைமையானது சர்வதேசச்

சட்டத்தை மீறுவதாக ‘லாஸ்ட் சான்ஸ்’ அமைப்பும் சாமியான் மக்களும் நம்புகின்றார்கள். ஆகையால், இந்த நிலைமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும், நீதியை நாடிப்பெறவும் சம்பந்தப்பட்ட எந்தவொரு சர்வதேச அமைப்புக்களுக்கும் செல்ல அவர்கள் விரும்புகின்றார்கள்.

சர்வதேசச் சட்டத்தின் தற்போதைய நிலைப்பாட்டின் பின்னணியில் மேலுள்ள சூழ்நிலையில் இனங்காணப்பட்டவர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புடைமைகள் தன்மை தொடர்பான கருத்துத்தெரிவிக்கும் சர்வதேச வழக்கறிஞர் என்று உம்மைக் கருதிக்கொள்க. கருத்துரை செய்க.

**(100 புள்ளிகள்)**

3. **(அ), (ஆ)** மற்றும் **(இ)** ஆகிய **மூன்று** பிரிவுகளுக்கும் விடை தருக.

மேகா, ஓலா மற்றும் ஷோரா ஆகிய மூன்றும் இறைமையுள்ள அரசுகளாகும். டோரா என்ற பெயருடைய ஆயுதக்குழுவொன்றுடன் உள்நாட்டு ஆயுதமோதலொன்றில் ஈடுபடுகின்றது. ஷோரா பிரசையொருவனான ஷோனால் என்பவன் டோரா அமைப்பினது தலைவனாவான்.

(அ) 2021 ஏப்ரல் மாதத்தில் சர்வதேச கலாசார விழாவொன்றின் போது ஷோராவில் ஒரு தாக்குதலைத் திட்டமிட்டு செயல்படுத்தினர். இந்த தாக்குதலின் விளைவாக, ஷோராவினது 100 பிரசைகளும் மெகாவினது 50 பிரசைகளும் இறந்துள்ளனர் என்பதுடன், கிட்டத்தட்ட 1000 பேர் காயமடைந்தனர். அவன் மெகாவின் குடிமகன் என்று தெரிவிக்கும் கடவுச்சீட்டில் அங்கு பயணம் செய்த குற்றத்திற்காக தாக்குதல் நடந்து ஒரு மாதத்ததுக்குப் பிறகு ஷோனால் ஓலாவில் கைது செய்யப்பட்டான். மேகா மற்றும் ஷோரா ஆகிய இரண்டு அரசுகளும் திருவிழா மீதான தாக்குதலுக்காக ஷோனால் மீது வழக்குத் தொடர விரும்புகின்றது.

மேகா மற்றும் ஷோரா ஆகிய அரசுகளுக்கு ஆலோசனை கூறுக. **(50 புள்ளிகள்)**

(ஆ) அதனிடையே, டோரா குழுவினது ஆயுத விநியோகத்தரான டெனி என்பவன் மேகாவின் குடிமகனும் குடியிருப்பாளனும் ஆவான். தொழிலுக்காக ஷோராவில் பயணஞ்செய்து கொண்டிருந்தபோது ஷோரா காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளான். ஷோராவுக்கு ஆலோசனை கூறுக. **(25 புள்ளிகள்)**

(இ) மேற்கூறிய சூழ்நிலைகளில், திருவிழா மீதான தாக்குதலுக்காக ஷோனால் அல்லது டெனியின் மீது விசாரணை மற்றும் வழக்குத் தொடர ஓலாவுக்கு ஏதேனும் அடிப்படை உள்ளதா? ஓலாவுக்கு ஆலோசனை கூறுக. **(25 புள்ளிகள்)**

4. ஓரிகானோ என்பது பல இன மக்கள் வாழுகின்ற ஜீரா என்ற நாட்டிலுள்ள ஒரு பிராந்தியமாகும். ஜீராவினது பொருளாதாரத்துக்குப் பங்களிக்கும் இயற்கை வளங்கள் நிறைந்ததே ஓரிகானோ ஆகும். அண்மையில், ஓரிகானோ தேசியக் கட்சியானது (ONP) ஜீராவிடமிருந்து சுதந்திரம் பெற்றுள்ளதாகப் பிரகடனஞ்செய்தது. பல நூற்றாண்டுகளாக ஓரிகானோ மக்களது உரிமைகளையும் சுதந்திரங்களையும் ஜீரா அரசு வேண்டுமென்றே நசுக்கியுள்ளது என்பதுடன், அதன் காரணமாகவே அவர்கள் தாமாக முன்னேற வேண்டியேற்பட்டதாக அவர்கள் கோருகின்றனர். ONP ஆனது ''நமது சுதந்திரத்துக்காக'' என்ற முழக்கத்துடன் அண்மைய ஓரிகானோ தேர்தலில் போட்டியிட்டதுடன், 80% வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. ONP ஆனது தம்மை ஓரிகானோ சுதந்திரக் குடியரசின் அதிகாரபூர்வ அரசாங்கமாக பிரகடனஞ்செய்தது.

எவ்வாறாயினும், ஓரிகானோ இன்னும் ஜீராவினது ஒரு பகுதி என்றும் எதிர்காலத்திலும் அது அப்படியே இருந்துவரும் என்றும் ஜீராவினது சனாதிபதி தெரிவித்தார். மேலும், ஓரிகானோவுக்குச் சென்று நிலைமையைக் கட்டுப்படுத்த தேசிய ஆயுதப்படைகளுக்கு உத்தரவிட்டார்.

சியாம்பலா என்பது கைத்தொழில்மய அரசொன்று என்பதுடன், அது ஓரிகானோ பிராந்தியத்தில் பரியளவில் முதலீடு செய்துள்ளது. நீர் சியம்பவலாவினது சட்ட ஆலோசகர் என்று கருதிக்கொள்க. பொருத்தமான சர்வதேசச் சட்ட விதிகளின்படி ஓரிகானோ மற்றும் ஜீராவுடனான அவர்களின் உறவு தொடர்பாக அவர்களுக்கு ஆலோசனை கூறுக.

**(100 புள்ளிகள்)**

5. பகுதிகள் **(அ)** மற்றும் **(ஆ)** ஆகிய **இரண்டுக்கும்** விடை தருக.

(அ) கண்டியானா தேசிய சட்டக்கல்லூரியில், ''இறையாண்மை மற்றும் இராஜதந்திர விடுபாட்டுரிமைகள் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு'' என்ற தலைப்பில் விருந்தினர் உரை நிகழ்த்துவதற்காக நீர் அழைக்கப்பட்டுள்ளீர். இரண்டு கோட்பாடுகளினதும் முக்கிய பண்புகளை வலியுறுத்துமாறு நீர் வேண்டிக்கொள்ளப்பட்டுள்ளீர்.

பொருத்தமான உதாரணங்களுடன் தொடர்புபடுத்தி உமது உரையினை எழுதுக.

**(50 புள்ளிகள்)**

(ஆ) ஸீபா என்ற நாட்டிலுள்ள குடியியல் சமூக ஆர்வலர்கள் தங்கள் அரசாங்கத்தின் ஊழல் மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். அவர்கள் தலைநகர் ஸீபாவில் எதிர்ப்புப் பேரணிக்கு ஏற்பாடு செய்துள்ளனர். ஆர்ப்பாட்டப் பேரணியின்போது, காவல்துறையினர் எதிர்ப்பாளர்களை நோக்கிச் சுடுவதற்குத் தொடங்கினர். அவர்களில் சிலர் ஸீபாவிலுள்ள சிலோனிக்கா தூதுவராலயத்தின் முன் நின்றுகொண்டிருந்தனர். தேவி என்பவள் சிலோனிக்காவினது தூதுவராலய அதிகாரியொருத்தியாவாள். காயடைந்த சில எதிர்ப்பாளர்களுக்கு

அவள் அடைக்கலம் கொடுத்தாள். பின்னர், போராட்ட அமைப்பாளர்கள் சிலரை நாட்டைவிட்டு வெளியேறி சிலோனிக்காவில் தஞ்சம் கோரிப்பெற உதவுகின்றார். ஸீபாவினது தேசிய பாதுகாப்பை அச்சுறுத்தும் உள்நாட்டு எழுச்சியை ஆதரித்ததன் அடிப்படையில், தலைநகர் ஸீபாவினது நீதவான் நீதிமன்றத்தால் தேவியைக் கைது செய்வதற்கான பிடிவிராந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, அண்டைய அரசான ஹோராவிலுள்ள மனித உரிமைகளுக்கான குழுவொன்று, போராட்டக்காரர்களுக்குத் தீங்கு விளைவித்தமைக்காக ஸீபாவினது பாதுகாப்பு அமைச்சரான கரண் என்பவருக்கு எதிராக ஹோரா நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளது.

தேவி மற்றும் அல்லது கரண் ஆகியோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமா? நடைமுறையிலுள்ள சர்வதேசச் சட்டத்துடன் தொடர்புபடுத்தி உமது விடையினை ஆதாரப்படுத்துக. **(50 புள்ளிகள்)**

6. ‘சண்டி’ என்ற அரசினதும் ‘ரண்டு’ என்ற அரசினதும் முதுநிலை அதிகாரிகளுக்கு இடையில் சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெற்று வந்தாலும், 2021ஆம் ஆண்டில் ராக்கட் மற்றும் ஆளில்லா விமானத் தாக்குதல்கள் உட்பட இரு நாடுகளுக்குமிடையிலான வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. அதிகரித்து வரும் பதட்டங்கள், அரசியல் தேக்கம், பிராந்திய உறுதிப்பாடின்மை மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் ஆழ்ந்த நம்பிக்கையற்ற உணர்வு என்பன தற்போதைய நிலைமை தொடர்பான செய்திகள் மற்றும் சமூக ஊடகங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. அமைதி மற்றும் போரைத் தடுப்பதற்கான சர்வதேச செயல்முறைகள் மீது உலகளாவிய பொது அவநம்பிக்கை அதிகரித்து வருவதாக நிகழ்நிலைக் கருத்துக் கணிப்புக்கள் காட்டுகின்றன.

   போரைத் தடுப்பதற்கும் அமைதியைப் பேணுவதற்குமான சர்வதேசப் பிரச்சனைகளை களுக்கு அமைதியான தீர்வுகளை வழங்குவதற்கும் சர்வதேசச் சட்டம் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பினது வகிபங்கு தொடர்பான இணைய வலைப்பதிவு இடுகையைத் தயாரிக்க நீங்கள் முடிவுசெய்த சட்ட ஆய்வறிஞர் ஒருவர் என்று உம்மைக் கருதிக்கொள்க.

   சர்வதேசச் சட்டத்தின் பொருத்தமான விதிகள் மற்றும் யதார்த்த உலக உதாரணங்களைச் சுட்டிக்காட்டும் இணையத்தள வலைப்பதிவு இடுகையை எழுதுக.

   **(100 புள்ளிகள்)**

*****************